முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு

தொல்காப்பியம் - பொருளதிகாரம்

புறத்திணையியல்

பாடக்குறியீடு - P16TA34

# தொல்காப்பியம்

## புறத்திணையியல்

புறப்பொருள் - கல்வி, ஈகை, புகழ், வீரம் இவற்றை புரியும் படிமாகப் பெயரைக் கூறி அடுத்துரைப்பது.

| புறம் | அகம் |
| --- | --- |
| வெட்சி | குறிஞ்சி |
| வஞ்சி | முல்லை |
| உழிஞை | மருதம் |
| தும்பை | நெய்தல் |
| வாகை | பாலை |
| காஞ்சி | பெருந்திணை |
| பாடாண்திணை | கைக்கிளை |

குறிஞ்சி - குறிஞ்சி நிலத்தலைவன் தலைவியர் பிறர் அறியாதபடி களவு வாழ்க்கையை மேற்கொள்வர்.

வெட்சி - அதே போல வெட்சி மறவர்கள் பிறர் அறியாதபடி பகை நாட்டுக்கு சென்று அங்குள்ள ஆநிரைகளை கவர்ந்து வருவர்.

வெட்சி திணை இலக்கணம் :-

மன்னர்களால் ஏவிவிடப்பட்ட மறவர் வேற்று நாட்டிற்கு சென்று அங்குள்ள ஆநிரைகளை கவர்ந்து வருதல்

இதில் 14 துறைகள் உள்ளன.

பன்னிருபடலம் — மன்னுறு தொழில் / தன்னுறு தொழில்

தொல்காப்பியர் மன்னுறுதொழிலை பற்றி கூறி உள்ளார்

வெட்சி திணை துறைகள் 14 + 2 = 16 துறைகள்

1) படை இயங்கு அரவம்

வெட்சிப்பூச்சூடி படை மறவர் ஆரவாரம் செய்தல்

2) பாக்கத்து விரிச்சி (நற்சொல் கேட்டல்)

ஆநிரையை கவர மேற்கொண்ட செயலின் பயன் அறிய நற்சொல் கேட்டல்

3) செலவு → ஆநிரையைக் கவரப்போகும் செய்கை - பகைவர் (ஒற்றர்கள்) அறிய முடியாதபடி மறவர் மறைந்து செல்லுதல்

4) வேய் → பகைவரசரின் ஒற்றர்கள் அறியாத வகையில் பகைவர் நாட்டை தம் ஒற்றர்கள் மூலம் ஆராய்தல்.

5) புறத்திறை → ஒற்றர்களால் ஆராயப்பட்ட ஊர் எல்லையைச் சுற்றி வளைத்து வெட்சி மறவர் தங்குதல்

6) ஊர்கொலை → ஊரில் உள்ள அனைத்தையும் அழித்தல்

7) ஆகோள் → பகைவரின் ஊரில் இருந்த ஆநிரைகளைக் கைப்பற்றி வருதல்

8) பூசல்மாற்று → ஆநிரையை மீட்க வந்த பகைவராகிய கரந்தை மறவர்களிடம் இருந்து மீண்டும் ஆநிரைகளை மீட்டு வருதல்

9) நோயின்று உய்த்தல் → கவர்ந்த ஆநிரையை துன்புறுத்தாமல் ஓட்டி வருதல்

10) நுவல் வழித் தோற்றம் → மறவர்களைப் பற்றி உயர்ந்தவர் முன் வெட்சி மறவர்கள் தோன்றுதல்

11) தந்துநிறை → ஆநிரைகளை ஊரின் பொதுவில் கொண்டு நிறுத்துதல்

12) பாதீடு → கவர்ந்து வந்த ஆநிரைகளைப் பங்கிட்டுக் கொடுத்தல்

13) உண்டாட்டு → ஆநிரைகளை பங்கிட்டுக் கொண்ட மறவர்கள் தம் வெற்றியை கள்ளுண்டு மகிழ்தல்

14) கொடை → தமக்குரிய பசுக்களை இரந்து கேட்டவருக்குக் கொடையாகக் கொடுத்தல்

மேலும் வெட்சிக்குரிய துறைகள் (2)

1) குடிநிலை → மறவர்களின் குடிநிலை

2) கொற்றவைநிலை →

1) குடிநிலை / ஆண்பால் → இல்லாண்முல்லை

↓ \ பெண்பால் → மூதின் முல்லை

மறவரின் சிறப்பை கூறுதல்

* ஆண், பெண் இருபாலார்க்கும் பொது

2) கொற்றவை நிலை

வெற்றிக்கு காரணமாக விளங்கும் கொற்றவையை புகழ்ந்துரைத்தல்

# கரந்தைத் திணை

கரந்தை திணை துறைகள் 15+6 = 21

**கரந்தை திணை :-**

வெட்சிக்கு அடுத்தாக வைக்கப்பட்டுள்ளது. வெட்சிக்கு எதிரான திணை ஆகும்.

பகைவர் கவர்ந்து சென்ற ஆநிரையை மீட்டு வருதல் ஆகும்.

**கரந்தை திணை துறைகள் :-**

1) கரந்தல் -> வெறியாடல் வேலன் கரந்தல் பகைவரைச் சூழ ஆநிரை மீட்கச் செல்லும் கரந்தை மறவர் குறும்பூச் சொல்லைக் கூறி வெற்றி வேண்டி வெறியாடல்

2) போந்தை (சேரன்) பனம்பூ பாண்டியன் - வேப்பம்பூ

3) ஆர் (ஆத்திப்பூ) - சோழன்

4) நிரை மீட்டல் - கரந்தை

5) வள்ளி - வள்ளிக் கூத்தை கரந்தை மறவர் ஆடுவர்

6) கழல் நிலை -> தாம் அணிந்திருக்கும் வீரகழலை மறவர்கள் புகழ்தல்

7) உன்னநிலை -> உன்னம் என்ற மரத்தோடு ஒப்பிடுதல்

உன்னம் -> சகுனம் காட்டும் ஒரு வகை மரம்

கேடு - இலை உதிரும்

கேடில்லை -> தழைத்துக் காணப்படும்

8) பூவை நிலை : காயாம் பூவினது மலர்ச்சியைத் திருமாலின் மேனிக்கு ஒத்ததாக காட்டுவது. காத்தல் தொழிலை மன்னருக்கு உரியதாக காட்டுவது.

9) அமர் ஓட்டல் - போர் களத்தில் வெட்சி மறவரைப் புற முதுகிடத் தோற்று ஓடச் செய்தல்

10) ஆவெயர்ந்து தருதல் - கரந்தையர் ஆநிரையை வெட்சி மறவரிடம் இருந்து மீட்டல்

11) வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தல் - சிறப்பு பொருந்திய மன்னனின் மேம்பாட்டை கரந்தை மறவர் எடுத்துக் கூறுதல்

12) நெடுமொழி தன்னொடு புணர்த்தல்

அஞ்சின்மையிய - தன்னையைத் தன்னொடு கூறுதல்

13) தார் தாங்குதல் - தார் (தூசிப்படை)

தூசிப்படையை ஆற்றுடன் எதிர்த்தல்

14) வாள் வாய்த்துக் கவிழ்தல் :-

பகைவரை வாளால் வீசிய கரந்தை மறவர் தாமும் வீழ்ந்துபடுதல்

15) பிள்ளைவாட்டு :-

பறையொலியை முழங்கி சுரந்தை மறவனின் வீர சொர்க்கத்தை அடைய பரிசாக தருவது பிள்ளைவாட்டு

16) காட்சி : நடுகல்லைத் தேர்ந்தெடுத்தல்

17) கல்கோள் : கல்லைக் கொண்டு வருதல்

18) நீர்ப்படை : கல்லை நீரிலிட்டு தூய்மை செய்தல்

19) நடுதல் : கல்லை நடுதல்

20) பெரும்படை : நடப்பட்ட கல்லை கோயிலாக்குதல்

21) வாழ்த்தல் : கல்லை தெய்வமாக வணங்குதல்

2) வஞ்சி திணை

வஞ்சி திணை துறைகள் _ 13 துறைகள்

அடங்காத மண் ஆசையால் அரசர்கள் ஒருவரை ஒருவர் போர் செய்வது வஞ்சி திணை ஆகும்

வஞ்சி திணை முல்லைக்கு புறன் ஆயிற்று

முல்லை திணை - காடும் காடு சார்ந்த இடமும்

* நல்ல நீர் நிலையும் நிழலும் போர் செய்ய வேண்டும் அது முல்லை நிலத்தில் காணப்படும்

* முல்லை திணையில் தலைவன் தலைவி பிரிந்து இருப்பர்

* வஞ்சி திணையில் போர் செய்வதற்காக தலைவியை அரசன் பிரிந்து இருப்பான்

வஞ்சி திணைக்குரிய துறைகள்

1) இயங்கு படை அரவம். (ஆரவாரம், பேரோசை)

வஞ்சி பூவினை சூடி மறவர்கள் ஆரவாரம் செய்தல்

2) எரிபரந்து எடுத்தல்

பகை நாட்டினை எரித்து விட்டு வருதல்

3) பெருமை .

போருக்கு செல்லும் மறவனின் பெருமை பற்றி பேசுதல்

4) கொடுத்தல் எய்தல் கொடைமை

போரிக்கு சென்ற அரசனும் மறவனுக்கு அரசன் கொடை கொடுத்தல்

5) அருத்தோர்ந்து அடல்

பகைவர் அதிகமாக இருக்கும் இடத்திற்கு சென்று போர் செய்தல்

6) மாறாயம் (நீண்ட மொழி) பெற்ற நெடுமொழி *

அரசனால் பொருள் பெற்ற மறவர் அரசனுக்காவும் நாட்டிற்க்காவும் மக்களுக்காவும் இன்னும் போர் செய்வேன் என சூழ் உரைத்தல்.

மாறாயம் (அரசனால் சிறப்பிக்கப்பட்ட பட்டம்)

7) பொருள் இன்றி உய்த்த பேராண்மை பக்கம் *

பேராண்மை – பெருமை பெற்ற ஆண்மை

பகைவனை துச்சமாக கருதி அவர்தம் படைக்குள் புகுந்து போர் செய்தல்

8) ஒருவர் தாங்கிய பெருநிலை :-

எதிர்த்து வர கூடிய பகை நாட்டு மறவர்களை தனி ஒருவனாக நின்று போர் செய்தல்

9) பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை :-

அரசன் பெருஞ்சோற்றினை மறவர்களுக்கு வழங்குதல்

10) வென்றோர் விளக்கம் :-

வஞ்சி மன்னனின் மனம் மகிழ்ச்சி அடையும் படி புலவர்கள் மறவர்கள் புகழ்ந்து பேசுதல்

11) தோற்றோர் தேய்வு :-

தோற்ற பகை அரசனின் அழிவை கூறி பழித்து உரைத்தல்

12) தொற்ற வஞ்சி :

வெற்றி பெற்ற அரசனுக்கு தோற்ற அரசன் திறை செலுத்துதல்.

13) அழிப்படை படை தட்டோர் தழிஞ்சி

போர்களத்தில் வழிபுண்பட்ட மறவனை வஞ்சி நாடு அரசன் கட்சி தழுவி எடுத்து பாராட்டுதல்

3) உழிஞை திணை → 8 துறைகள்

சுற்றி வளைத்தல், அழித்தல்

மூன்று வகையான அரண்கள்

1) தலை அரண் - மதில் சுவர்

2) அகழி (இடை அரண்) நீர் அரண்

3) காவற் காடு (காடு)

அரசனை நெருங்க முடியாமல் பாதுகாக்கும்

உழிஞை மருதத்திற்கு புறன் ஆயிற்று

மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்

உழிஞை திணையில் நாட்டில் போர் நடக்கும் அதனால் மருதத்திற்கு

புறன் ஆயிற்று

விடியற்காலையில் போர் நடக்கும் ..

விடியற்காலை மருதத்திணைக்குரிய சிறுபொழுதாகும்

மருதம் → தலைவி தலைவன் புறத்து ஒழுக்க மேற்கொண்ட

காரணத்தால் வீட்டை விட்டு வெளியே அனுப்பி விடுவாள்

உழிஞை → இதில் அரசன் பகை நாட்டு அரசனிடம் இருந்து

உள்ளேயே இருப்பான் (கோட்டையின் உள்ளேயே இருப்பான்)

தன்னை பாதுகாக்க கோட்டையின் உள்ளேயே இருப்பான்

உழிஞை திணைக்குரிய துறைகள் 4+4

4 - உழிஞை

4 - நொச்சி

உழிஞை திணைகள் :-(4)

1) கொள்ளார் தேயம் குறித்த கொற்றம்

தன்னை அரசனாக ஏற்காதவர் மற்றும் தன் கட்டளையைக் கேட்காத இடைப்பட்ட நாட்டினையும் கைப்பற்றி வெற்றி கொள்ளுதல்

2) உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு :-

கோட்டையை கைப்பற்றி வெற்றி பெற்றதும் நொச்சி அரசனை அழிக்க கூறுதல்

3) தொல் எயிற்று இவர்தல் :-

பகைவனின் மதில் மீது ஏறி உழிஞை மறவர்கள் போர் செய்தல்

4) தோலது பெருக்கம் :-

பகைவரின் தாக்கும் தோலாகிய சிறுபடை (கேடயம்) பெருமையினை கூறுதல்

நொச்சி துறைகள் (4)

5) அகத்தோன் செல்வம் :

மதிலின் உள்ளே உள்ள அகப்பட்ட நொச்சி அரசனின்

செல்வமிகுதியைக் கூறுதல்

(எ.கா) "அலிதோ பாரியது பறம்பே பாரியின் மாளிகையில் திரைய செல்வம் இருக்கிறது

நளிகொள் முரசின் மூவிரும் முற்றியும்"

6) புறத்தோன் அணங்கிய பக்கம்

கோட்டைக்கு வெளியே இருக்கும் உழிஞை அரசன் வருந்துமாறு

நொச்சி அரசன் (அரணுக்குள்ளே) இருந்து போர்செய்தல்

7) திறம்பட ஒருதான் மண்டிய குறுமை:-

திறம்பட ஒருதான் மண்டிய குறுமை நொச்சி அரசன் தான் பெருமையாக மறவர்களை இறந்த பின்பும்

நின்று போர் செய்தல் [கற்பனை]

8) வருபகை பேணார் ஆர்எயில் ... நொச்சி மறவரின் வலிமையைக்

மதில் மீது நின்று போர்செய்யும்

கூறுதல்

" வீரப்போர் செய்தாலும் வென்றி அரிதரோ

மாயப்போர் மன்னன் மதில்"

## உழிஞைத் திணைக்குரிய துறைகள்

1) குடை நாள்கோள் :

போர் தொடங்குவதற்கு அறிகுறியாக நல்ல நாளில் வெண்கொற்றக் குடையினைப் புறப்பட செய்தல்

2) வாள் நாள் கோள்

போர்வாளினை நல்ல நாளில் நல்ல நாளில் புறப்பாடு செய்தல்

"அறிந்தார் அன்றி அரவும் உடும்பும் போல்
ஏறினார் ஏணி பலர்"

3) ஏணி மயக்கம்

மதில் மீது ஏணியைப் பொருத்தி அதன் மீது நின்று பகைவருடன் போர் செய்தல்

4) அமர் ஓழிய வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வு

உழிஞை அரசன் புறமதிலை வென்று கையிட்டு அகமதிலை முற்றுகையிடுதல்

5) வீழ்ந்த நொச்சி

அரசனை காப்பதற்காக போர் செய்து நொச்சி மறவர் இறந்து படுதல்

6) புறத்தோன் வீழ்ந்த புதுமை :-

மதிலை வளைத்து நின்ற உழிஞை மறவர்கள் உள்ளே இருந்த நொச்சியாரால் வீழ்த்தப்படுதல்

7) நீர்ச்செரு வீழ்ந்த பாசி *

நீரில் பாசியைத்திரைக்கும் அதுபோல மறவர்கள் சிலநேரங்களில் ஒன்றாக சேர்ந்தும் தனித்தனியாகவும் போர் செய்வர்

அகழி பரந்து ஒழுகும் அமகுருதிச் சேற்றுப்

பகழிவாய் வீழ்ந்தார் பலர்

8) ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன்மறன் (பாசிமறன்)

ஊரில் நடந்தபோரில் விருப்பத்தோடு தன் ஆற்றலைக் காட்டி இறந்துபடுதல்

9) மதில் மிசை இவர்ந்தோன் மேலோர் பக்கம்

கோட்டை மதிலில் ஏறிநின்று மதிலைக் கைப்பற்றுவதற்காக இருதிறத்து மறவர்களும் போர்செய்தல்

10) மண்ணுமங்கலம் *

மதில்மேல் நின்று போர் செய்த அரசனைக் கொன்று நீராடிய பின்னர் பகையரசனின் மணிமுடியைச் சூடிக்கொள்ளுதல்

"செய்சுடர்ப்பூண் மன்னவன் சேவகத்தில் வைகினதே

மெய்சுடர்ப்பூண் மன்னன் இது"

11) வென்ற வாளின் மண் (மண்ணுமங்கலம்)

வெற்றிக்கு காரணமான திருவாளை நீராட்டுதல்

12) தொகை நிலை

வெற்றிபெற்ற மன்னனுடன் பலரும் ஒருசேரக்

கூடிவந்து உயிரை மன்னனிடம் தஞ்சம் அடைதல்.

## தும்பை திணை

"தும்பைத்தானே நெய்தலது புறனே"

தன் வலிமையை உலகத்தார் அறியவேண்டும் என்பதற்காக

அதிரி நாட்டு அரசன் போர் செய்பவனையே கொன்று விடுவான்.

"நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும்"

வலிமை பொருந்திய இருபெரும் அரசர்களும் போர்

செய்வதற்கு உகந்த இடம் மணலும் மணல்பரப்பு களர் நிலமே

உகந்த இடம் ஆகும்.

எற்பாடாகிய சிறுபொழுதே போர் முடியும் பொழுது

ஆகும் எற்பாடு - தும்பை திணைக்குரியது

## தும்பை திணை சிறப்பு

அம்பு படுக்கை } நீரில் உள்ள அட்டை போன்ற காட்சி

வேல் படுக்கை

→ உடல் கிடைவியாகி

இரண்டாக வெட்டப்பட்ட நீரில் வாழக்கூடிய அட்டை போல் இருந்தது.

## தும்பைத் திணையின் துறைகள் :- 12

1) தானை நிலை

காலாட் படை மறவரின் போர்ச்சிறப்பைக் கூறுதல்

2) யானை நிலை

பகைவரை தாக்கிய யானையின் சிறப்பை கூறுதல்

3) குதிரை நிலை

குதிரையின் சிறப்பை கூறுதல்

5) தபுதிப் பக்கம்

போர்க்களத்தில் படைத்தலைவர் தம்முள் கடுமையாக போரிட்டு ஒருங்கே இறந்துபடுதல்

4) தார்நிலை :-

வேலால் வெற்றி பெறுதலையே நோக்கமாகக் கொண்டு போர்செய்தல்

5) கூழை தாங்கிய பெருமை

தான் ஒருவனாக முன்னே நின்று பகைவரை ஆற்றலுடன் எதிர்த்து போரிடுகின்றவரின் பெருமையை கூறுதல்

6) தார் நிலை

பகைவர் கூட்டத்தில் சிக்கிய தம் அரசரை மீட்டு பகைவரை வீழ்த்திய படைத்தலைவரின் சிறப்பை கூறுதல்

7) பாழி கொள்ளும் ஏமம்

படைக்கருவிகளை இழந்த நிலையில் தம் உடல் வலிமையால் மறவன் மற்போர் செய்து வெற்றி பெறுதல்

8) களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடு

பகையரசன் ஏறிவந்த யானையைக் கொன்ற மறவனின் பேராற்றலை பெருமைப் படுத்துதல்

9) வாளோர் ஆடும் அமலை :

பகைவர் ஏறிவந்த யானையைக் கொன்று வெற்றி பெற்ற அரசன் அவனுடைய வாள்படை மறவர்கள் அவ் அரசனின் உடலின் அருகில் நின்று தன் மண்ணைப் புகழ்ந்து ஆடுதல்

10) தொகை நிலை

போர்களத்தில் பகைகொண்டு இருவரை மற்றவர் வாளால் வெட்டுவர் அம்மறவனை வென்று அம் இருதிறத்து அரசர்களும் மறவர்களும் இருவரும் மொத்தமாக இறந்து படுதல்

11) நல்லிசை நிலை

போர்களத்தில் தம் அரசன் பகை மறவன் ஒருவனால் இறந்துபட்டான் அம்மறவனை வென்று அவனை கொன்று தம்புகழினை வெளிப்படுத்துதல்

12) ஒள்வாள் வீசிய நூழில்

பல பகைவரை கொன்றுகுவித்தலே நூழில் பகைவர் பலரை ஒருசேரக் கொன்று குவித்தல்

## வாகைத் திணை

### வாகைத்திணை பாலைக்குப் புறனே

வாகைத்திணை மறவர்கள் மனவலிமை மிக்கவர்கள்

2) இது போருக்குரிய திணையாகாது மறவர்களிடமிருந்து தன்னை மறவர்கள் தம் திறமையால் வேறுபடுத்திக் காட்டுவது ஆகும்.

3) அத்திறலால் மேம்பட்டு சிறந்து விளங்கும் தன்மை

4) பல்லோருடனும் ஒப்பிட்டு எல்லோரையும் விட மேலானவன் என்று மிகுத்துக் கூறுவது போர் வெற்றியுள் அடங்கும்

5) ஒருவர் இயல்பாக பெற்ற வெற்றி - முல்லை
பிறரோடு ஒப்பிட்டு கூறும் வெற்றி - வாகை

பாலை

தனக்கென தனி நிலம் இல்லாமல் எல்லா நிலத்திலும் வேனிற்காலம் பற்றி நிற்பது பாலை (அதுபோல)

எல்லா நிலத்திலும் எல்லா குலத்திலும் உரிய காலத்தில் வெற்றி பிறக்கும் அதுவே வாகை திணை ஆகும்

1) தலைவியோடு உள்ள தலைவன் புகழ் காரணமாக புகழ் காரணமாக வினை மேற்கொண்டு பிரிவது பாலை ஆகும்

2) ஒருவினை செய்வோரின் ஆற்றலால் சிறக்கப்பட்டு புகழ்தோற்றுவிப்பது வாகை

1) அறுவகைப்பட்ட பார்ப்பனர் பக்கம் :-

1) ஓதல் (கற்றல்) 2) ஓதுவித்தல் (கற்பித்தல்)
3) வேட்டல் (யாகம் செய்தல்) 4) வேட்பித்தல் (யாகம் செய்வித்தல்)
5) ஈதல் 6) ஏற்றல்

2) ஐவகை மரபின் அரசன் பக்கம் :-

1) ஓதல் 2) வேட்டல் 3 ஈதல் 4) படைக்கருவிகளை வழங்குதல் 5) குடியோம்புதல்

3) இருமூன்று மரபின் ஏனோர் பக்கம் (வணிகர்)

1) ஓதல், வேட்டல், ஈதல் 4) உழவு, 5) வணிகம்
6) நிரையோம்பல் என்பன

4) இருமூன்று மரபின் ஏனோர் பக்கம் (வேளாளர்)

1) உழவு , உழவு ஒழிந்ததொழில் 3) விருந்தோம்பல்

4) பசுப் புறந்தருதல் (ஆடுமாடுகளை பாதுகாத்தல்)

5) வழிபாடு 6) வேதம் அல்லா கல்வி

5) அறிவன் தேயம் (காலத்தை கணிப்பவன்) கணியன் , சோதிடன்

தன்னுடைய அறிவால் திரிபின்றி உணர்ந்து மழை, வெயில்

எப்போது வரும் என அளக்குபவன்

*

6) தாபதப் பக்கம் :- சான்று முனிவரின் செயல்கள்

1) நீராடுதல் 2) நிலத்தில் படுத்தல் 3) தோலாடை உடுத்தல்

4) சடைவளர்த்தல் 5) தீ வளர்த்தல் 6) ஊருக்குள் செல்லாமை

7) காட்டில் கிடைக்கும் உணவினை உண்ணுதல்

8) தெய்வப் பதுமை

7) மரபின் பொருநர்

பொருநர் - வாள் , தோளால் போரிடுபவர் வெற்றியை

சிறுத்து கூறுபவர்

8) அவைநிலை :

முன்பு சொல்லப்படாத சொல்லாற்றல் மிக்கவர், பாடல் புலவர், கூத்து இயற்றுதல், சூதாடுதல், ஆட்டுக்கிடாய் போர், பறவைப் போர் இவ்வகை ஒழுக்கத்தில் தன்மை பெற்று விளங்குபவரின் பெருமையை எடுத்து கூறுதல் வாகை திணை ஆகும்

## வாகை திணையின் துறைகள் -18

1) திணை — வாகை

துறை — கூதிர் பாசறை, வேனிற் பாசறை

2) களவழித் தேரோர் தோற்றிய வெற்றி :- உழவு — அறக்களவழி

போர்க்களத்தை ஏர்க்களமாக்கி பாடுவது — மறக்களவழி

3) முன்தேர்க்குரவை : தேர்ப்படை உடைய பகை அரசனால் போரிட்டு வென்ற அரசனின் தேரின் முன் குரவைக் கூத்தாடுதல்

4) பின் தேர்க்குரவை : முன் தேர்க்குரவையின் மரபினைப் பொருத்தித் தேரின் பின் நின்று குரவைக் கூத்தாடுதல்

5) பெரும் பகை தாங்கும் வேல் :-

பகைவரை அழிக்க காரணமான வேலினது நிலையைக் கூறுதல்

6) அரும் பகை தாங்கும் ஆற்றல்

போர் செய்வதற்கு அரிய பகைவரைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல்மிக்க வெற்றியைக் கூறுதல். தடுத்து நிறுத்தும் ஆற்றல்

7) புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கம் :-

வறுமை நிலையிலும் வெற்றி அடைந்த மறவனின் நிலைய மிகப்பெரிய ஆற்றலைப் புகழ்தல்.

8) அவிப்பலி :

பகைவர் நாணம் அடையும் படியாகத் தன் அரசனைக் குறித்து முன்பு சூளுரைத்தான் மறவன் அதுவே சொன்ன சொல்லை நிறைவேற்றியவன். பலபிறப்புகளிலும் அரசனுக்காக தன் உயிரை பலிகொடுத்தல்

9) ஒலிலாரர் இடையயன் புகிலிய பாலிக் :-

நாடுகைப்பற்றிய பண்பு பகை நாட்டினர் உடன் சினமின்றிச் சேர்ந்திருத்தல்.

10) சான்றோர் பக்கம் :-

ஏருது (வேளாளர்) பசு (வணிகர்) பகைநாட்டின் உடன் சினமின்றி சேர்ந்திருத்தல் குற்றமற்ற சிறப்பினை உடைய சான்றோரின் சிறப்பினை கூறுதல்

11) கழிமனை நீத்த பால் :

பிறருடைய மனைவியை விரும்பாமல் சிறந்த மனையறத்தில் மேம்பட்டு நிற்றல்

பிறன் மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் அன்றோ ஆன்ற ஒழுக்கு

12) எட்டுவகை நுதலிய அவையகம்.

1) நற்குடிப்பிறப்பு
2) கல்வி
3) ஒழுக்கம்
4) வாய்மை
5) தூய்மை
6) நடுநிலைமை
7) பொறாமை இல்லாமை
8) அவாவின்மை

அவ்வெட்டுவகையான பாகுபாட்டை கொண்டு விளக்கும் அவையத்தாரின் சிறப்பினைக் கூறுதல்

13) கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை :-

இல்லத்தின் கட்டுவகை ஒழுக்கங்களையும் மேம்பட்டிருத்தல்

1) அடக்கமுடைமை

2) ஒழுக்கமுடைமை

3) நடுவுநிலைமை

4) வெஃகாமை

5) புறங்கூறாமை

6) தீவினை அச்சம்

7) அழுக்காறாமை

8) பொறையுடைமை

14) இசையில் அன்புகழ்க் கொடை

கொடுப்பதற்கு அரிதானவற்றைக் கொடுத்தல், சிபியைப்போல கொடுத்தல்

15) பிழைத்தோர்த் தாங்கும் காவல் :-

தனக்கொரு பெரிய தீங்கினைச் செய்தோரையும் பொறுத்துக் கொண்டு அவரைப் பாதுகாத்தல்

16) பொருளொடு புணர்ந்த பக்கம் :-

அழியும் தன்மைகொண்ட உலகப் பொருள்களிலிருந்து நீங்கி அழிவற்ற உண்மைப் பொருளாகிய இறைவனை உணர்தல்.

17) அருளொடு புணர்ந்த அகற்சி :-

யான் என்ற அகப்பற்றையும் எனது என்ற புறப்பற்றையும் நீக்குதல்

18) காமம் நீத்த பால் :-

ஆசையிலிருந்து முழுமையாக நீங்கி மேம்பாடு அடைதல்

அவா அறுதல் → ஆசையிலிருந்து நீங்குதல்.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசே
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள் (திருமந்திரம்)

## காஞ்சித் திணை

### காஞ்சித் திணையின் இலக்கணம் :

"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
நில்லா உலகத்து புல்லிய நெறித்தே"

நிலையாமை ↑ மதுரைக்காஞ்சி

அன்பின் ஐந்திணைக்குப் புறனாக அமைவது பெருந்திணை அதுபோல

1) வெட்சி முதலாக புறத்திணை ஐந்திற்கும் புறன் காஞ்சி

2) துன்பமும் காமப்பகுதியாக அமைவது பெருந்திணை

நிலையாமையாகிய துன்பத்தைக் கூறுவது காஞ்சி

ஆசை, வெகுளியும், யாக்கை நிலையாத் தன்மை கொண்டு

35) குறள் எண் : 332

கூத்தாட்டு அவைக் குழாம்

காஞ்சி திணையின் துறைகள் 10 + 10 = 20

மாற்றரும் கூற்றம்

→ ஆண்பாற்துறை 2) பெண்பாற்றுறை - நச்சர்

→ இளம்பூரணர் 10 முன் + பின் 10 என்கிறார்

1) சொல்வதற்கு அரிய சிறப்பினை உடையது முதல் 10

2) பெருந்துயரத்தை எடுத்துக்கூறுவன பின் 10

சிறப்பிற்குரியவை - 10

1) மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமை - பெருங்காஞ்சி.

எவ்வகையிலும் யாராலும் தடுக்க முடியாத கூற்றுவன் எமன் உயிரைக் கவர்ந்து செல்வான் என்பது.

2) கழிந்தோர் ஒழிந்தோர்க்கு காட்டிய முதுமை

வாழ்வின் நிலையை உணர்ந்த சான்றோர், இளையோர்களுக்கு வாழ்வை பற்றி கூறுவது - முதுகாஞ்சி

3) புண் கிழித்து சாயும் மறம் :- மறக்காஞ்சி

தன் புண்ணைத் தானே கிழித்து கொள்ளுதல்.

4) மன்னைய காஞ்சி

இறந்த வீரனுடைய சிறப்பை பேசுதல்

5) ஊன் திணை காஞ்சி

சூழ் ஊறு செய்தல்

6) வஞ்சின காஞ்சி

வஞ்சினம் பேசுதல்

7) தொடா காஞ்சி

பேய்கள் தொட்டுவிடாதபடி போரில் புண்பட்ட மறவனை பாதுகாத்தல்

8) ஆஞ்சி காஞ்சி

தன் கணவனை கொன்ற வேலை எடுத்து தானும் குத்திக் கொண்டு மனைவி இறந்துபடுதல்

9 மகட்பால் காஞ்சி

பகையரசன் பெண்கேட்டு வரும்போது தன் மகளை மணம் முடித்து கொடுக்க அஞ்சுவது

10) தலையொடு முடிதல்

தன் கணவர் தலையோடு தன் தலையையும் சேர்த்து அணைத்துக் கொண்டு மனைவி உயிரை விடுவது

பெருந்துயரம் – 10

11) மூசல் மயக்கம்

மறவனின் உடலை சுற்றி சுற்றத்தார் அழுது புலம்புதல்

12) பையுள் :-

பகையரசனால் சிறைப்படுத்தப் பட்டவர்கள் தம் துன்பத்தை கூறுவது

13) மூதானந்தம் :-

கணவன் இறந்ததும் மனைவியும் தன் உயிரைப் போக்கிக் கொள்ள போகும் போது வழியில் செல்வோர் இரங்கி கூறுவது

15) கையறு நிலை :- 2 வகை

இறந்தோனின் நிலையை எண்ணி தனி இறக்க போ வருந்தி கூறுவது.

16) பாலை நந்தம் :-

பாலை நிலத்தின் வழியே செல்லும் கணவன் இறந்து போகிறான். அவனை நினைத்து புலம்புதல்

17) தாபதநிலை :-

கணவனை இழந்த தலைவி மிகவும் வருந்தி நிற்பது தாபதநிலை.

18) மாலைநிலை :-

கணவனை எரிக்கும் தீயினுள் மனைவி தானும் புகுதல் பலரும் காப்பாற்றி நிறுத்துதல். மாலைக் காலத்தில் மனைவி வருந்தி புலம்புதல்.

19) தலைப் பெயல் நிலை :-

மகனை பெற்றெடுத்த தாய் தன் மகன் இறந்து போனதும். அவனை அணைத்துக் கொண்டு புலம்புதல்

20) காடு வாழ்த்து :-

பலரும் இறந்த பின்னர் நிலையான தன்மை கொண்ட சுடுகாட்டினை வாழ்த்துவது.

## பாடாண் திணை விளக்கம் வகைகள் :

"பாடாண் திணைக்குப் புறன் கைக்கிளை"

கைக்கிளை நிலம் பெறாதது எல்லாத்திணைக்கும் உரியது பாடாண்

திணையும் தனித்து நிற்பதன்றி போர்த் திணை அந்திற்கும் உரியதாம்

ஒருதலையாய் ஒருவரை புகழ்ந்துரைப்பது பாடாண்

வகைகள் < தேவர் பாடாண் / மக்கள் பாடாண்

பாடாண் பாட்டின் பொருண்மைகள்

அமரர் கண் முடியும் அறுவகையாவும்

தெய்வங்களுக்கு உரிமை உடையவை புகழ்மொழிகள் -6

1) கொடிநிலை 2) கந்தழி 3) வள்ளி 4) புலவராற்றுப்படை

5) புகழ்தல் 6) பரவல் ஆறும் தெய்வத்திற்குரியவை.

மக்கள் பாடாண் + ⑦ குற்றமற்ற இல்லறவாழ்க்கை அகத்திணை

மக்களுக்குரியது

பாடாண்பாட்டு இயற்றப்படும் முறை :-

அமர கண் முடியும் அறுவகையாவும்

தெய்வங்களுக்கு உரிமை உடையவை புகழ்மொழிகள் -6

**பாடாண்பாட்டு இயற்றப்படும் முறை :-**

இயற்பெயரை வெளிப்படையாகக் கூறியும், ஊர் நாடு பாட்டுடைத் தலைவனை இன்னார் என உரை வைத்தும் இப்பாட்டு அமையும்.

**பொருள் வேறுபாடுகள் :-**

1) ஒருவர் மற்றொருவரைப் போற்றிப்புகழ்தல்

2) வாழ்த்தி வணங்குதல்

3) இன்ப பகுதியாகிய காமப்பொருண்மை

வாழ்த்தல் புகழ்தல், காமக்குறிப்பு மூன்று நிலைகளில் செந்துறை வண்ணத்தில் பாடுவர்.

1) போற்றிப் புகழ்தல் → படர்க்கைக்குரியது

2) வாழ்த்தி வணங்குதல் → முன்னிலைக்குரியது

3) இன்ப (காமப்) பகுதி

1) கடவுள் மாட்டு தெய்வப் பெண்டிர் நயந்த பக்கம்

2) கடவுள் மாட்டு மானுடப் பெண்டிர் நயந்த பக்கம்

**குழந்தைப் பாடாண்**

"குழவி மருங்கினும் கிழவதாகும்"

குழந்தைப் பருவத்தைக் கடந்து வந்தவனைக் குழந்தையாக கருதிப் பாடுவது - பிள்ளைத்தமிழ் என்ற சிற்றிலக்கிய வகையைச் சாரும்.

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமையான"

இது உலா என்ற சிற்றிலக்கிய வகையை ஆகும். தலைவன் உலா வருகையில் பெண்கள் காதல்பாடல் வசப்படல்

1) அகத்திணைப் பாடாண் பாட்டில் இயற்பெயர் வரும் புறத்திணையொடு கூடிய அகப்பகுதி இது.

கடவுள் வாழ்த்தொடு வருபவை:

1) கொடிநிலை : கந்தழி, வள்ளி

கொற்றவள்ளை : அரசனின் வெற்றிப்புகழை எடுத்துரைப்பது. கடவுள் வாழ்த்துக்குரியது.

வேறுபாடு

கொற்றவள்ளை - வஞ்சித் திணைக்குரியது - துறையாக புகழ்தல் கருத்தாயின் பாடாண் திணையில் அடக்கப்படும்.

பாடாண்திணையின் துறைகள் 6+4 = 10

கொடுப்போர் ஏத்திக் ......

1) கொடுப்பவரை ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்

கொடுத்தவரை புகழ்தல் - பாரி பாரி ....

2) கொடுக்காதவரைப் பழித்தல் -

3) இரண்டையும் ஒன்றாக்குவது

2) இயன்மொழி வாழ்த்து :-

ஒருவரின் இயல்பினை வெற்றி சிறப்பை விளக்குவது.

(எகா) இனிய பெரும எமக்கே மற்றதன்
இன்னாய் பெருமநின் ஒன்னாதோர்க்கே"

3) கடைநிலை :-

பரிசிலர் தன் வரவை அரசனுக்கு கூறும்படி அரண்மனை வாயிலைக் காத்து நிற்கும் காவலரிடம் கூறுவது.

4) கண்படை நிலை :-

அரசன் ஆழ்ந்து உறங்கிய உறக்கத்தின் சிறப்பினை கூறுவது

5) வேள்வி நிலை :-

அரசன் கருமை நிறம் கொண்ட காராம் பசுவினை அந்தணர்க்கு கொடையாகக் நிலையினைக் கூறுவது.

6) விளக்கு நிலை :-

அரசன் கருமை நிறம் கொண்ட காராம் பசுவினை அந்தணர்க்கு கொடையாகக் கொடுத்த நிலையினைக் கூறுவது

7) வாயுறை வாழ்த்து !-

பிறர்க்கு நன்மை பயக்கும் வகையில் உலக உண்மையைக் கூறி நல்வழிப் படுத்துவது

8) செவியறிவுறூஉ !

சான்றோர்க்கு கட்டுப்பட்டு அடங்கி நடத்தலை கடமையாகக் கொள்ள வேண்டும். செவியின் கண் படுமாறு எடுத்துரைப்பது.

9) புறநிலை வாழ்த்து !-

பழியற்ற செல்வத்தோடு நீயும் உன் மரபினரும் இனிது வாழ்க என வாழ்த்துவது.

10) கைக்கிளை வகை !-

ஆண்பாற் கூற்று

பெண்பாற் கூற்று

இதுவும் பாடாண் திணையைச் சாரும்

பாடாண் திணையின் துறைகள் :- 13

1) துயிலெடைநிலை :-

அரசன் மக்களுக்காக நீண்டநேரம் துயில் கொள்ளும் போது மக்கள் அரசன் மீண்டும் எழுந்து வர வேண்டும் என பாடும் பாடல்

2) கூத்தரும் 3) பாணரும் 4) பொருநரும் 5) விறலி ஆற்றுப்படை

6) பெருமங்கலம் :- (அரசனின் பிறந்தநாள்

அரசன் தன் சினம் தணிந்து புனித நீராடுதல் ...

7) மண்ணுமங்கலம் :-

ஆண்டு தோறும் கொண்டாடப்படும் முடிசூட்டு விழா நாளில் அரசன் மண்ணிய நீராடுதல் மண்ணுமங்கலம்.

8) குடைநிழல் மரபு :-

அரசனின் குளிர்ந்த நிழல் தரும் நல்லாட்சியைச் சிறப்பதற்குக் காரணமாக அமைவது வெண் கொற்றக்குடை அதனை புகழ்ந்து கூறுவது குடைநிழல்

9) வாள்மங்கலம் :-

பகைவரை அடக்கும் வீரவாள். அவ்வீர வாளினை புனித நீராட்டி வழிபடுவது.

10) மண்ணுமங்கலம் :-

பகைவரின் அரசனை அழித்து நீராடுவதைப் புகழ்ந்து கூறுவது மண்ணுமங்கலம்.

11) பரிசில் கடைக்கூட்டுநிலை :-

தன்னை நாடி வந்த பரிசிலர்களை வணங்கி அவர்களுக்கு வேண்டியதை அரசன் கொடுப்பான். அதனைப் பெற்றவர் புகழ்ந்து கூறுவது பரிசில் கடைக்கூட்டுநிலை ஆகும்.

12) இருவகைவிடை

பரிசில் பெற்ற புலவர்கள் அரசனிடம் விடைக்கேட்பர். அவன் விடைத்தருவான் (சென்று வருக) இதுவே இருவகைவிடைகள்

13) துயிலெடை :-

துயிலிருந்து நீக்கி இறப்பு, நிகழ்வு எதிர்வு என்னும் மூன்று காலங்களில் நன்மை உண்டாகும்படி கூறுவது நல்லது செய்தல்

## கற்பியல்

களவு வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டு பின் ஊரார் அறியத் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவது கற்பாகும்.

தலைவிக்கு சான்றோர், பெற்றோர், அந்தணர் போன்றோ அறிவையும் ஒழுக்கத்தையும் கற்பிப்பர். இதன் இயல்புகளைக் கூறுவதே கற்பியல் 53 நூற்பா

1) மணவினைச் சடங்கு 2) தலைவன் கூற்று

3) தலைவி கூற்று 4) செவிலி கூற்று

5) காமக்கிழத்தியர் கூற்று 6) வாயிலோர்கள் கூற்று

7) தலைவியின் பண்பு 8) தலைவனுக்குரிய மரபு

9) கற்புறம்.

### கற்பின் இலக்கணம் :-

தலைவியை திருமணம் செய்து கொள்ளும் மரபினையுடைய தலைவன், கொடுப்பதற்கு உரியோர் கொடுக்க அவளை ஏற்றுக் கொள்ளுதல். காரணம் - திருமணச்சடங்கு)

உடன்போக்கில் திருமணம்

1) நெஞ்சுதனை அவிழ்த்த புணர்ச்சி :-

இவர் நெஞ்சம் கற்பொடு தளர்ந்தப்பிறகு மகிழ்ந்த நிலையில்

தலைவன் தனக்குள்ளேயே பேசுதல்.

2) எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவம் :- வரும் கற்புக்காலத்தில்

இடைவிடாத மகிழ்ச்சி இருந்து

தலைவன் பேசுவான்

3) அச்ச வந்த உரிமை :-

தானும் பிறரும் அஞ்சுமாறு அமைந்த தலைவியின் கற்பு நெறி

கண்டு தலைவன் வியக்கிறான். அந்நெறியில் தலைவி வாழ்வது கண்டு

தலைவன் பேசுவான்

4)

5) குற்றம் சான்ற பொருள் எடுத்துரைத்தல் :-

களவு காலத்தில் ஏற்பட்ட வைதியாமம் போன்ற

குற்றங்களுக்கு காரணமாகிய பொருளை எடுத்துக் கூறுதல்

6) மறைகடவுள் ஏத்திய மருங்கு

களவு காலத்தில் நம்மை காப்பாற்றிய தெய்வம்

உண்டு என்கிறாள் தோழி அந்தெய்வத்தை வணங்கும் போது தலைவன்

பேசுவான்

7) அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச் சொல்லுறு பொருள்

களவு காலத்தில் தலைவி அடைந்த துன்பங்களுக்காக தலைவன் தலைவியிடம் ஆறுதல் மொழிகளைப் பேசுவான்.

“யாயும் ஞாயும்”...... (எ.கா)

8) அசைவியும் கூறவும் தொகுத்தல்

நீ விசமே கொடுத்தாலும் அது அமிர்தம் போன்றது.

9) ஒழுக்கம் காட்டிய குறிப்பு

அந்தணர், சான்றோர் மற்றவரோரிடம் நீ இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்கிறபோது தலைவன் பேசுவான்.

10) அலமரல் உள்ளமொடு அளவிய இடம்:-

களவு காலத்தின் சுவையை கொண்ட தலைவி கற்புக்காலத்தில் அதனைப் பேசுவாள். அப்பொழுது தலைவன் விளையும் போக்கில் கூற்று நிகழும்.

11) அந்தரத்து எழுதிய எழுத்தின் மான வந்த குற்றம் வழிகெட ஒழுகல்

ஒழுக்க குறைபாட்டால் வந்த குற்றம் எல்லாம் கற்புக் காலத்தில் அழிந்து விட்டதைத் தலைவன் விளைந்து கூறுதல்.

12) அழியல், அஞ்சல் என்று ஆகிய இரு பொருளிலும் தான் அவள் பிழைத்த பருவம்

இயற்கைப்புணர்ச்சியில் தலைவிக்கு தலைவன் அசசதல் கூறுவான். இக்காலச் சூழல்களை நினைத்துக தலைவியோடு தலைவன் பேசுவான்

13) தன்னின் ஆகிய தகுதி :-

ஈருடல் ஓருயிர் தலைவியால் வந்த குற்றம் தன்னில் சூழ்ந்தது என்பான் தோழி தலைவியால், அத்தன்மையில் தலைவன் பேசுவான்

"யாரினும் காதலாம் என்றேனை ஊடினாள் யாரி
யாரினும் என்றும்"